## கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா. 1(LW1)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மொக்கைராஜ் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | கக்கணன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு  10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2  எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குரும்பபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 2ஆம் எதிரி எனது மருமகள். 1ஆம் எதிரி என் மகன் வீட்டிற்கு அருகில் குடியிருந்து ஆசிரியராக பணிபுரிகிறார். எனது மகன் பெயர் சென்ராயன். சுமார் 3  ஆண்டுகளுக்கு முன்னார் நான் தோட்டத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். வேலை முடிந்து எனது மகனை வீட்டிற்கு அனுப்பி வைத்து நான் தோட்டத்தில் தங்கிவிட்டேன். மறுநாள் காலை முருகேசன் என்பவர் என் மகன் அவரது வீட்டில் இறந்து கிடப்பதாக காலை 5.30 மணியளவில் தகவல் கொடுத்தார். நான் தகவல் கிடைத்தவுடன் மகன் வீட்டிற்கு போய் பார்த்த போது என் மகன் குப்புற விழுந்து  இரத்தில் இறந்து கிடந்தார். பின்னர் நான் நிலக்கோட்டை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றுவிட்டேன். என் மகன் வீட்டில் என் மகனும் என் மருகளும் வசித்து வந்தார்கள். நான் சென்று பார்த்த போது எனது மருமகள் (ஏ2) அங்கே இருந்தார். நான் ஏற்கெனவே 1ஆம் எதிரிக்கும் எனது மகருமகளான  2ஆம் எதிரிக்கும் முறையற்ற தொடர்பு இருந்ததால் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். கள்ள தொடர்பு தொடர்பாக இதற்கு முன்பு நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்திருந்தேன். புகாரின் பெயரில் போலீசார் நடவடிக்கை எடுத்து விசாரணை செய்தார்கள். அந்த விசாரணையில் 2ஆம் எதிரி தன் கணவருடன் சேர்ந்து வாழ்வதாக சொல்லி என் மகன் வீட்டிற்கு வந்துவிட்டார்.அதன் பின்பு சுமார் 6 மாதம் கழித்து இந்த சம்பவம் நடந்தது. நான் போலீசில் புகார் கொடுத்தற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 3 மாதம் ஆகியும் நடவடிக்கை எடுக்காததால்

நான் உயர் நீதிமன்றத்தில் மனு செய்தேன். அப்போது கொரோனா நேரம் என்பதால் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. உயர் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவு பிறப்பிக்கக்பட்டது. அதன் பிறகு நான் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுத்தார்கள். நான் போலீசில் கொடுத்த புகார் தான் அ.சா.ஆ.1 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. எனது மகன் இறந்தது சம்பந்தமாக போலீசில் புகைப்படம் எதுவும் நான் கொடுக்கவில்லை. என் மருமகன் கருப்பையா கொடுத்தார். போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னிடம் விசாரிக்கவில்லை.

<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது தோட்டத்திற்கும் எனது மகனின் வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். எனது மகன் இறந்து கிடந்த வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 2 கி.மீ தூரம் இருக்கும். எனது மகன் இறந்து கிடந்த வீட்டிற்கும், எங்கள் ஊருக்கான VAO அலுவலகத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். எனது மகன் இறந்த கிடந்த அன்று காலை போலீசார் மற்றும் VAO வந்தர்கள். அவர்கள் வந்த போது சுமார் காலை 7.30 , 8.00 மணி இருக்கும். அதற்கு முன்பு போலீசார் வரவில்லை. நான் சென்ற பார்த்த போது இறந்து கிடந்த எனது மகனை உயிர் உள்ளதா இல்லையா என்று திருப்பி பார்க்கவில்லை. போலீசார் வருவதற்கு முன்பு ஆம்புலன்ஸை வரவழைத்து எனது மகனின் உடலை மருத்துவமனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பெயரில் தான் போலீசார் அந்த இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் மற்றும் VAO எனது மகன் இறந்து கிடந்த வீட்டின் மாடியிலும், கீழே முழுவதும் சென்று பார்த்தார்கள். என் மகன் இறந்து கிடந்த இடத்தில் இருந்த பொருள்களை போலீசார் கைப்பற்றி சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது மகன் இறந்து கிடந்த வீட்டின் கீழ் வீட்டில் ரோட்டை பார்த்து சன்னல் உள்ளது என்றால் சரிதான். இறந்து கிடந்த வீட்டின் அருகில் 60 அடி துாரத்தில் தண்ணீர் குழாயும், தெரு விளக்கும் உள்ளது என்றால் சரிதான். நான் போலீசில் புகார் கொடுத்த போது எனது மைத்துனர் வெள்ளைச்சாமி உடன் இருந்தார். இறந்து போன எனது மகனுக்கும் செல்வி மற்றும் கண்மணி ஆகியோருக்கும் இடையில் கள்ளத்தொடர்பு இருந்தது என்றால் இல்லை. எனது மகன் டிரைவராக பணிபுரிந்த போது பல்வேறு இடங்களில் கடன் வாங்கி அதனால் பிரச்சனைகள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னையும் 2ஆம் எதிரியையும் தொடர்புபடுத்தி பேசிக்கொண்டார்கள் என்றும், அதனால் என் மகன் என்னிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. என் மகன் இறந்த பின்பு சுமார் 60 நாட்கள் எங்கள் வீட்டில் தான் வசித்து வந்தார். அதன் பின்பு 2 ஆண்டுகள் அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டார். இந்த விபரம் வெள்ளைச்சாமி மற்றும் என் மனைவிக்கும் தெரியும். உயர் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த மனு மற்றும் உத்தரவு நகல்களை நான் வைத்துள்ளேன். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவ இடத்தை பார்க்கவில்லை என்றும், 1ஆம் எதிரிக்கும், 2ஆம் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன எனது மகனுக்கு கடன் பிரச்சனை மற்றும் கள்ளத்தொடர்பு பிரச்சனைகள் இருந்தன

என்றும் அதனால் அவர் தூக்கு மாட்டினார் என்றும், அது அறுந்து விழுத்த போது அவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ஆம் எதிரியிடம் இறந்து போன என் மகன் சுமார் ரூ.5 லட்சம் முதல் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல. என் மகன் இறந்த பிறகு 1ஆம் எதிரி இந்த கடனை என்னிடம் திரும்ப கேட்டார் அதில் இருந்து தப்பிக்க போலீசில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொல்வது சரியல்ல. எனது மகன் இறந்த பிறகு அவர் கடன் வாங்கிய பல நபர்கள் என்னிடம் பிரச்சனை செய்தார்கள் என்றும், அப்போது நான் என் மருகளிடம்(ஏ2) அவரது வீட்டில் இருந்து பணம் வாங்கி வரும் படி வற்புறுத்தினேன் என்றும் 2 மாதம் கழித்து நான் வீட்டில் இருந்து அவரை துரத்திவிட்டேன் என்றும் சொல்வது சரியல்ல. வழக்கில் உண்மை தன்மை இல்லததால் தான் போலீசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்யாமல் இருந்தார்கள் என்றும், என்னுடைய வற்புறுத்தலின் பெயரில் பொய்யாக எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொல்வது சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 17:00:40 +0530

Additional District Judge,

Dindigul.